**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 23.07.2025**
**OS. No. 23/2014**
**வழக்கு சாட்சி PW.2– முருகன், த/பெ.ராஜி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2009ல் என் படிப்பை முடித்தேன். எனக்கு நீதிமன்றதிலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதேனும் சார்வு செய்யப்பட்டதா என்றால் இல்லை. வாதி மகாலிங்கம் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். வாதி மகாலிங்கத்தின் தந்தை கண்ணுபையன் மின்சார இணைப்பு மாற்றி வாங்கிவிட்டதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்திருந்தார். எனக்கு வாதி மகாலிங்கம் பங்காளி முறை ஆவார். நான் எலக்டிரிக்கல் வேலை செய்கிறேன். நான் வாதி மகாலிங்கத்திடமும் வேலை செய்வேன். வேறு யாரேனும் அழைத்தாலும் வேலை செய்வேன்.

2) இந்த வழக்கை மலர்விழி, அறிவுக்கரசு, அரவிந்தன் மற்றும் மின் வாரிய துறையினர் மீது தாக்கல் செய்துள்ளார்கள். அந்த மின் வாரிய துறையினர் யார் யார் என்று குறிப்பாக தெரியுமா என்றால் தெரியாது. விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் 05.06.1993ல் பிறந்தேன். 1971 மற்றும் 1972ம் வருட கிரைய பத்திரங்கள் குறித்து எனக்கு வாதி மகாலிங்கத்தின் தந்தை சொல்லி தெரியும். வாதி மகாலிங்கத்தின் தந்தை சொல்லி தான் மேற்கண்ட கிரைய பத்திரங்கள் குறித்து தெரியும் என்ற விவரத்தை என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மலர்விழி என்பவரை நான் சிறுவயதில் பார்த்துள்ளேன் அதற்கு பிறகு பார்த்ததில்லை. 2, 3 பிரதிவாதிகள் என்ன செய்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சிறுவயதில் இருக்கும் போது அவர்களை பார்த்துள்ளேன், அதன் பிறகு பார்த்ததில்லை. நான் சிறுவனாக இருக்கும்போது தான் 1 முதல் 3 பிரதிவாதிகளை பார்ததுள்ளதாகவும்,

அதன்பிறகு அவர்களை பார்த்ததில்லை என்ற விவரத்தை என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்கண்ட விவசாய நிலம் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது எந்த சர்வே எண், எவ்வளவு அளவு என்று எனக்கு தெரியுமா என்றால் ச.எண்.534 என்று தெரியும், அதன் அளவு எனக்கு தெரியாது.

3) 1ம் பிரதிவாதி மலர்விழியின் நிலம் சர்வே எண்.534ல் உள்ளது எனக்கு தெரியும், அதன் அளவு எனக்கு தெரியாது. தங்கம்மாள் உயிருடன் இருக்கும்போது 1992ம் வருடத்தில் தன் மகன்களுக்கு வாய்மொழியாக பாகம் பிரிக்கப்ப்டடதாக நான் நிரூபண வாக்குமூலத்தில சொல்லியுள்ள விவரம் என் தந்தை ராஜி சொல்லி எனக்கு தெரியும். என் தந்தை சொல்லி தான் எனக்கு தெரியும் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். கண்ணுபையனுக்கு தாவா சொத்து பாகமாக கொடுத்துள்ளதாக நான் சொல்லியுள்ள விவரம் கண்ணுபையன் சொல்லி எனக்கு தெரியும். கண்ணுபையன் அவர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும் என்ற விவரமும், அவர் எப்போது என்னிடம் சொன்னார் என்ற விவரத்தையும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் கண்ணுபையன் இறந்துவிட்டதாக நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) 1992ம் வருடத்திலிருந்து வாதி தாவா சொத்தை அனுபவித்து வருவதாக நான் சொல்லுவதற்கு பட்டா, சிட்டா, அடங்கல் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து எத்தனை பிரிவுகளாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 2 பிரிவுகளாக காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த 2 பிரிவுகளின் சக்குபந்தி வடக்குபுறம், மேற்குபுறம் மாதம்மாள், தெற்குபுறம் செண்பக கவுண்டர், கிழக்கில் புறம்போக்கு நிலம் ஆகும். இதன் மத்தியில் உள்ள ச.எண்.534/3Cல் உள்ள 9சென்ட் மற்றும் 13 சென்ட் நிலங்கள் ஆகும். மேற்கண்ட விவரங்கள் வாதி மாகலிங்கம் வாய்மொழியாகசொல்லி எனக்கு தெரியும், நான் அளந்து எதையும் பார்க்கவில்லை. 1ம் வாதியின் தாயார் எந்த வருடம் கிணறு தோண்டினார் என்றால் எனக்கு தெரியாது. கிண று தோண்டியதாக என் தாத்தா மற்றும் பாட்டி சொல்லி எனக்கு தெரியும். என் தாத்தா மற்றும் பாட்டி சொல்லி தான்

எனக்கு தெரியும் என்ற விவரத்தை என் நிரூபண வாக்குமூலத்தில் ஏன் சொல்லவில்லை என்றால் விரிவாக நான் சொல்லவில்லை. விரிவாக சொல்லவேண்டும் என்று எனக்கு தெரியவில்லையா என்றால் ஆமாம்.

5) மேற்கண்ட கிணற்றிற்கு எந்த வருடம் மின் இணைப்பு வழங்கப்பட்டது, யார் பெயரில் வழங்கப்பட்டது, அதன் மின் இணைப்பு எண் எனக்கு தெரியுமா என்றால் மாதம்மாள் பெயரில் வழங்கப்பட்டது, அதன் மின் இணைப்பு எண் மற்றும் வழங்கப்பட்ட வருடம் எனக்கு தெரியாது. எங்களுக்கு விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது, அதன் சர்வே எண்.532 ஆகும். ச.எண்.531ல் எங்கள் வீடு அமைந்துள்ளது. அந்த வீட்டின் க.எண்.5/244 ஆகும். அந்த வீட்டின் மின் இணைப்பு என் தந்தை ராஜி பெயரில் உள்ளது. அந்த வீட்டிற்கு பட்டா என் தந்தை பெயரில் தான் உள்ளது. அந்த வீட்டிற்கு என் தந்தை பெயரில் பட்டா மற்றும் மற்ற ஆவணங்களை காண்பித்து மின் இணைப்பு பெற்றோம். மின் வாரியத்தை பொறுத்தவரையில் பட்டா, வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் அனுபவ சான்று ஆகியவற்றை வைத்து தான் மின் இணைப்பு வழங்குவார்கள் என்றால் சரிதான்.

6) வாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வருவதற்கு ஆதரவாக அடங்கல் ஏதேனும் அவர்களிடமிருந்து பெற்று பார்த்தேனா என்றால் இல்லை. ச.எண்.534/3C என்பது யார் பெயரில் உள்ளது என்று வருவாய் துறை ஆவணங்களில் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் தாவா சொத்தை வாதிகள் அனுபவிக்கவில்லை என்றும், எனக்கு வழக்கு சொத்தை குறித்து எதுவும் தெரியாது என்றும், நான் வாதி மகாலிங்கத்திடம் வேலை பார்த்ததால் நான் பிறப்பதற்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் குறித்து அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1971 மற்றும் 1972ம் வருட கிரைய பத்திரம் எந்த நாள், எ ந்ததேதி, எந்த மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட பத்திரங்களை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1992ல் யார் யாருக்கு வாய்மொழியாக தங்கம்மாள் பாகம் பிரித்து கொடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் ச.எண்.534ல் ராஜா, கண்ணுபையன் மற்றும் நல்லதம்பி

ஆகியோருக்கு கொடுத்துள்ளார், எவ்வளவு அளவுகள் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்கண்ட சங்கதிகளும், கண்ணுபையன் அவர்களுக்கு வேறு ஒரு சர்வே எண்ணில் நிலம் கொடுக்கப்பட்டுள்ளதாக நான் சொல்லும் விவரமும் என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாததால் தான் எத்தனை பிரதிவாதிகள் உள்ளார்கள் என்று கூட எனக்கு தெரியவில்லை என்றும், வாதி மகாலிங்கம் சொன்னதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, அவர்கள் பெயரில் பட்டா ஏற்படுத்தப்பட்டு அனுபவித்து வருகிறார்கள் என்றும், இது தெரிந்து கொண்டும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி மகாலிங்கத்தின் பங்காளி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.